***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

\- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 580 / 2018*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 9*** |
| ***Name*** | : | **திரு. சரத்குமார்** |
| ***Father's Husband's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***23.09.2025***

<u>எதிரி ஆஜரில்லை. பிரிவு *317* குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது, பெங்களுரில் உள்ள தனியார் பிரின்டிங் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரியைத் தெரியும். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். எதிரி, மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் கெஸ்ட் லெக்சரராக வேலை பார்த்தார். கடந்த 2017 ம் ஆண்டு நான் தமிழ் துறையில் 2 ம் ஆண்டு படித்து வந்தேன். 26.09.2017 ம் தேதி பல்கலைக்கழகத்தில் வேலை வாய்ப்பு முகாம் நடந்து கொண்டிருந்தது. அன்றைய தினம் காலை 08.00 to 08.30 மணியளவில் நானும் என்னோடு படிக்கும் அழகுராஜா,. PhD ஸ்காலர் கருப்புசாமி ஆகியோர் தரைத் தளத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது காலை சுமார் 09.00

மணியளவில், திடீரென அய்யய்யோ காப்பாத்துங்க, காப்பாத்துங்க என்று ஒரு அலரல் சத்தம் கேட்டது. இரண்டாவது தளத்தில் உள்ள இதழியல் துறையின் துறைத்தலைவர் அலுவலத்தில் கத்தியால் ஒரு நபர் ஜெனிபா அவர்களைக் குததிக் கொண்டிருந்தார். அவர் பெயர் ஜோதிமுருகன். நாங்கள் மூன்று பேரும் போனவுடன் எங்களைப் பார்த்து கத்தியைக் கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் ஜெனிபாவை தூக்கிக் கொண்டு கீழே வந்துவிட்டோம். முகாமில் இருந்த ஆம்புலன்சில் அவரை ஏற்றி, நாகமலைபுதுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நாங்கள் மூவரும் போனோம். அங்கு முதல் உதவி சிகிச்சை பார்த்துவிட்டு, மதுரை வடமலையான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றோம். ஜெனிபாவின் இடது பக்க கழுத்து, முதுகு, நெஞ்சு, இடது புஜம் ஆகிய இடங்களில் காயம் காணப்பட்டது. நான் ஜெனிபாவைத் தூக்கும் போது அவரது உடம்பின் நடுப்பகுதியைப் பிடித்திருந்ததால், நான் அணிந்திருந்த சட்டை முழுவதும் இரத்தமாகிவிட்டது. வடமலையான் மருத்துவமனையில் ICU பிரிவில் அவரை அனுமதிக்கப்பட்டவுடன் நான் இரத்தக்ககறை படிந்த அந்த சட்டையோடு வகுப்பிற்கு சென்றுவிட்டேன். எங்கள் தமிழ்துறை பேராசிரியர் என்னிடம், சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு, குளித்துவிட்டு வருமாறு சொன்னார். சட்டையைக் கீழே போட்டுவிட வேண்டாம் பத்திரமாக வைத்திருக்கச் சொன்னார். என்னிடம் காட்டப்படும் சட்டை அன்றைய தினம் நான் அணிந்திருந்தது தான். மறுநாள் 27.09.2017 ம் தேதி மாலை 03.00 மணியளவில், நாகமலைபுதுக்கோட்டை ஆய்வாளர் விசாரணைக்கு வந்தார். அப்போது, ஆய்வாளரிடம் கையெழுத்திட்டு நான் அணிந்திருந்த சட்டையை ஒப்படைத்தேன். என்னுடைய அந்த சட்டை அசாபொ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்..

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

நான் படித்த தமிழ்துறை, இதழியல் துறையுடன் இணைக்கப்பட்ட துறை என்றால் சரியல்ல. நாங்கள் பேசிக் கொண்டிருந்ததாகச் சொல்லும் நேரத்தில் வகுப்புகள் ஆரம்பிக்கவில்லை. பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்களுக்கு ID Card கொடுத்துள்ளர்கள். எனது அடையாள அட்டையை போலிசாரிடம் கொடுத்தீர்களா என்றால் காண்பித்தேன். அவர்கள் பார்த்துவிட்டு திரும்ப கொடுத்துவிட்டார்கள். எனக்கும் ஜோதிமுருகனுக்கும் எவ்வித கொடுக்கல் வாங்கலும் கிடையாது. அவரை நான் அதற்கு முன்னர் பார்த்தது இல்லை. நான் பார்த்த போது, யாரோ ஒரு நபர் தாக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அன்றைய தேதியில், எங்களைத் தவிர இதழியல் துறையில் வேறு யாரும் இல்லை. சம்பவம் நடந்தது வகுப்பறையா அலுவலக அறையா என்றால் அலுவலக அறை ஆகும். வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றதாகச் சொல்லியுள்ளதில், அந்த முகாமில் சுமார் 500 பேர் கலந்திருப்பார்களா என்றால் தெரியவில்லை. வேலைவாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்களா என்றால் எனக்கு அது பற்றி எனக்குத் தெரியாது. அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் என்றால் நான் அந்தப் பக்கம் போகவில்லை. எனக்கு அதுபற்றி தெரியாது. வேலை வாய்ப்பு முகாம் நடப்பதாகச் சொன்னதால் 4,5 டேபிள்களை நாங்கள் தூக்கிப் போட்டோம். வேலைவாய்ப்பு முகாமிற்காக சுமார் எத்தனை பேர் arrangement வேலை பார்த்தார்கள் என்றால் சுமார் 4,5 பேர் பார்த்தார்கள். நாங்கள் டேபிள் தூக்கி போட்டோம். நான் 108 க்கு தகவல் சொல்லவில்லை. அங்கு ஏற்கனவே ஆம்புலன்ஸ் நின்று கொண்டிருந்தது. அந்த ஆம்புலன்சை நாங்கள் அழைத்துவரவில்லை. காலை 08.00 முதல் 08.30 மணியளவில் நான் என் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த போது அங்கு 108 ஆம்புலன்ஸ் நின்றுகொண்டிருந்ததா என்று நான் கவனிக்கவில்லை. வேலை

வாய்ப்பு முகாம் நடைபெற்றதால் அங்கு ஏற்கனவே போலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றால் நான் அந்த பக்கமே போகவில்லை. 108 ஆம்புலன்சிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் ஹாஸ்டலுக்குச் சென்று குளித்துவிட்டு, மீண்டும் வகுப்பிற்கு வந்தேன். ஆஸ்பத்திரியில் இருந்து நேராக வகுப்பறைக்குச் சென்ற பின்னர் தான் ஹாஸ்டலுக்குச் சென்று குளிக்கச் சென்றேன். நான் வகுப்பறைக்குச் செல்லும் போது, சுமார் 20, 22 மாணவர்கள் இருந்தார்கள்., நான் இரத்தக்கறை படிந்த சட்டையோடு இருந்ததை அவர்கள் பார்த்தார்கள். எங்கள் வகுப்பில் அன்றைய தினம் சமணசமய காப்பியங்கள் பற்றிய வகுப்பை, பேராசிரியர் சுமதி அவர்கள் நடத்திக் கொண்டிருந்தார். அவர் சொல்லித்தான் நான் டிரஸ் மாற்றச் சென்றேன். நான் குளிக்கச் செல்லும் போது, ஆடையைக் கழற்றி மேலே ஷெல்ப்பில் வைத்துவிட்டு குளித்தேன். அன்றைய தினம், அந்த ஆடையை காவல்துறையில் ஒப்படைக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. மறுநாளும் தோன்றவில்லை. ஆய்வாளர் வந்து கேட்ட பின்னர் தான் சட்டையைக் கொடுத்தேன். BA தமிழ் படித்தேன். எனக்கு நிறங்கள் வேறுபாடு தெரியும். என்னிடம் காட்டப்படும் அசாபொ.8 சட்டை பச்சை நிறம். நான் எனது சட்டையை ஆய்வாளரிடம் கொடுக்கும் போது, எனது சட்டையைப் பெற்றுக் கொண்டதற்காக ஆய்வாளர் மகஜர் தயார் செய்து என்னிடம் கையொப்பம் வாங்கினாரா என்றால் statement ல் கையெழுத்து வாங்கினார். இதைத் தவிர படிவங்களில் ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து பெறவில்லை. அன்றைய தினம் நான் போட்டிருந்த சட்டை எந்த மாடல் என்றால் முழுக்கை சட்டை ஆகும். அதற்குப் பிறகு காயம்பட்ட இதழியல்துறை தலைவரை நான் பார்த்து பேசவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை யார், எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என்னை யாரும் விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போல், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் நான் கல்லூரியில் படிக்கவில்லை என்றும் நான் அந்த

கல்லூரியில் மாணவர் இல்லை என்றால் சரியல்ல. அசாபொ.8 இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றும் நான் அதை அணிந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. skyblue colour சட்டை எதுவும் கொடுக்கவில்லை என்றால் அந்த சட்டை தான் அசாபொ.8 ஆகும். அந்த சட்டை green colour என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன விதத்தில் நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் அசா1 க்கு வேண்டப்பட்ட நபர் என்றும் அதனால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை